**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 266/2022**
**நாள் 25/02/2025 செவ்வாய்க்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஹரி | த/பெயர் – ஜெனார்த்தன் |
| வயது – 33 | தொழில் – |
| விலாசம் – அரூர் கிராமம், சத்தியவேடு | |

**முதல் விசாரணை–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்படுத்தப்பட்ட விபத்துக்கு 1 மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். என் தரப்பு சான்றாவணமாக ம.சா ஆ 1 முதல் ம.சா ஆ 11 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். ம.சா ஆ 5 ஆவணம் 2ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. பொன்னேரி அரசு மருத்துவமனை மருத்துவ குழுவால் வழங்கப்பட்ட ஊன சான்றிதழில் எனக்கு 40 சதவிகிதம் ஊனம் என சான்றளிக்கப்பட்டுள்ளது. அந்த ஊனச்சான்றிதழ் **நீ.ம.சா ஆ 1** ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1. (1). முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,
   (2). வாகன பதிவு சான்று TN18 AW 8809 அசல் **ம.சா ஆ 2** ஆகவும்,
   (3). வாகன காப்பீட்டு சான்று TN18 AW 8809 **ம.சா ஆ 3** ஆகவும்,

(4). வாகன ஓட்டுநர் உரிமம் TN18 AW 8809 நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,

(5). மருத்துவ விடுவிப்பு அசல் **ம.சா ஆ 5** ஆகவும்,

(6). கதிரியக்கப்படம் அசல் **ம.சா ஆ 6** ஆகவும்,

(7). மாதிரி வரைபடம் **ம.சா ஆ 7** ஆகவும்,

(8). குற்ற அறிக்கை நகல் **ம.சா ஆ 8** ஆகவும்,

(9). காயச்சான்று நகல் **ம.சா ஆ 9** ஆகவும்,

(10). விபத்து பதிவேடு நகல் **ம.சா ஆ 10** ஆகவும்,

(11). சம்பள ரசீது நகல் **ம.சா ஆ 11** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**